## யு.பி.எஸ்.சி. தேர்வில் மாணவர் சிவச்சந்திரன் முதலிடம்!

# நான் முதல்வன் திட்டம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி - பாராட்டு!

சென்னை, ஏப்.23-

"நான் முதல்வன்" திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர் சிவச்சந்திரன் UPSC தேர்வில் அகில இந்திய அளவில் 23-வது இடமும், தமிழ்நாட்டு தரவரிசையில் முதலிடமும் பெற்று சாதனை படைத்ததற்காக வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**எது மகிழ்ச்சி?**

**நான் மட்டும் முதல்வன் அல்ல; தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் முதல்வனாக என் பிறந்தநாளில் தொடங்கி வைத்த "நான் முதல்வன்" திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர் UPSC தேர்வில் தமிழ்நாட்டுத் தரவரிசையில் முதல்வனாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது!**

**பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் இந்தத் திட்டம், வருங்காலங்களில் இலட்சக்கணக்கானோரின் வாழ்வில் ஒளியேற்றிடும் என்ற நம்பிக்கை என் மகிழ்ச்சியாகியுள்ளது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நேற்று (22-4-2025) ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்தி நாதன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மறைமலை நகர் நகராட்சியில் புதிய பூங்கா அமைத்திட நடவடிக்கை!

# நின்னக்கரை ஏரியில் கழிவுநீர் விடுவிப்பது தடுக்கப்படும்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

சென்னை, ஏப்.23-

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது வினாக்களுக்குப் பதிலளித்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, "மறைமலை நகர் நகராட்சியில் புதிய பூங்கா அமைத்திடவும் - நின்னக்கரை ஏரியில் கழிவுநீர் விடுவிப்பது தடுக்கப்படும்" என்று குறிப்பிட்டார்.



கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**திருமதி ம.வரலட்சுமி:** செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர், நின்னக்கரை ஏரியில் கழிவுநீர் விடுவிப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் கே.என்.நேரு:** செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நின்னக்கரை ஏரி உட்பட, 31 நீர்நிலைகள் உள்ளன. இந்நகரிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரைச் சுத்திகரிக்க ஏற்கெனவே 2.20 M.L.D. கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தினை விரிவாக்கம் செய்ய கூடுதலாக அடிகளார் சாலையில் 11.43 M.L.D. கொள்ளளவும், சட்டமங்கலத்தில் 4.49 M.L.D. ஆகவும் மொத்தம் 15.92 M.L.D. கொள்ளளவு கொண்ட புதிய கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையங்கள் அமைக்க ரூ.37.30 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் 18-2-2025 அன்று பெறப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் பணி உத்தரவு வழங்கி பணிகள் துவங்கப்படும்.

**திருமதி ம.வரலட்சுமி:** செங்கல்பட்டு தொகுதியிலுள்ள மறைமலை நகர் நகராட்சியானது 58.08 சதுர கிலோ மீட்டரில் உள்ளது. இந்நகராட்சி 21 வார்டுகள் உள்ளடக்கிய பகுதியாகும். 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தப் பகுதியினுடைய மக்கள் தொகை 81 இலட்சத்து 361 ஆகும். தற்போது தொழிற்சாலைகளின் வளர்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களின் பெருக்கத்தால் புதிய குடியேற்றங்களினால் இந்த நகராட்சிப் பகுதியானது நாளுக்கு நாள் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது.

40 ஆண்டுகளுக்கு முன்பு 6 வார்டுகளுக்கு மட்டும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது மீதமுள்ள 15 வார்டுகளுக்கும் 11.43 M.L.D. கொள்ளளவு கொண்ட புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தந்தமைக்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மறைமலை நகர் நகராட்சிப் பகுதியில் பெண்களுக்கென்று தனியாக ஒரு மகளிர் பூங்கா அமைத்து அதில் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

**அமைச்சர் கே.என்.நேரு:** பூங்கா அமைப்பது என்பது தமிழ்நாடு அரசினுடைய ஒவ்வொரு நகரத்திலும், மிக முக்கியமாக மாலை நேரங்களிலே வயதானவர்கள் மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்காக பூங்காக்கள் ஆங்காங்கே நகராட்சிப் பகுதிகளிலும், பேரூராட்சிப் பகுதிகளிலும் அமைத்துக் கொண்டு வருகிறோம். அதற்காக நிதியை முதலமைச்சர் அவர்கள் தனியாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, மறைமலை நகர் நகராட்சியிலே தேவையான இடம் இருக்குமானால் உடனடியாக புதிய பூங்கா அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## வக்ஃப் சொத்துக்கள் தொடர்பான வழக்குகளுக்குத் தீர்வு காண - சென்னையில் இருப்பதைப் போல

# மதுரையிலும் ஒரு தீர்ப்பாயம் உருவாக்க அரசு நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் சா.மு.நாசர் அறிவிப்பு!

சென்னை, ஏப்.23-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு :-



**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் வக்ஃப் தீர்ப்பாயம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் சா.மு.நாசர்:** தென் மாவட்ட மக்கள் பயன்பெறும் பொருட்டு, வக்ஃப் சொத்துக்கள் மற்றும் அதன் நிர்வாகம் தொடர்பான வழக்குகளுக்கு தீர்வு காண சென்னையில் இருப்பதை போல மதுரையிலும் ஒரு தீர்ப்பாயம் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா:** புதுக்கவிதை பிதாமகன் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுக்கும், அறிவியல் தமிழின் தந்தை எனப் போற்றப்படக்கூடிய மணவை முஸ்தபா அவர்களுக்கும் அரசு விழா கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் அறிவித்ததற்காக மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வக்ஃப் தீர்ப்பாயம் தற்போது சென்னையில் மட்டுமே இருக்கின்றது. நீண்ட தூரம் பயணம் செய்து, சென்னைக்கு வர வேண்டிய ஒரு சூழலில், எப்படி சென்னை உயர் நீதி மன்றத்தின் கிளை மதுரையில் இருக்கின்றதோ, அதே போல், மதுரையில் ஒரு வக்ஃப் தீர்ப்பாயம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோல், கொங்கு மண்டலத்திலுள்ள மக்களுடைய பயன்பாட்டிற்காக கோயம்புத்தூரிலும் அதே போல், திருச்சி, டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பகுதிகளினுடைய மக்களுடைய பயன்பாட்டிற்காக திருச்சியிலும் வக்ஃப் தீர்ப்பாயம் அமைவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் சா.மு.நாசர்:** வக்ஃப் சட்டம் 1995-ன் பிரிவு 83-ன்படி வக்ஃப் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக, மாவட்ட அமர்வு நீதிபதி தலைவராக, கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் மூஸ்லிம் சட்டம்/நீதித் துறை அறிவு பெற்றவர் என இரண்டு உறுப்பினர்கள் உட்பட 25 ஊழியர்களைக் கொண்டு, 2018 ஆம் ஆண்டு சென்னையில் தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும், தென் மாவட்ட மக்களின் பயணச் சுமையைக் கருத்திற்கொண்டு, 17-2-2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிறுபான்மையினர் கூட்டத்தில் "வக்ஃப் சொத்துக்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான வழக்குகளை ஆய்வு செய்ய சென்னையில் இருப்பதை போல மதுரையிலும் ஒரு தீர்ப்பாயம் அமைக்கப்படும் என்று கூறியுள்ளார்கள். இதற்காக முதற்கட்டமாக, மதுரையில் வக்ஃப் தீர்ப்பாயத்தினை அமைப்பதற்கு, 13 பணியிடத்தை ஒப்பளிப்பு செய்து 26-3-2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இடத்தை தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

உறுப்பினர் அவர்கள் திருச்சி மற்றும் கோவையிலும் தீர்ப்பாயம் அமைக்க கோரியுள்ளார்கள். இது தொடர்பாக ஆய்வு செய்து, தேவை ஏற்படின் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா:** இசை முரசு நாகூர் ஹனீபாவினுடைய நூற்றாண்டை முன்னிட்டு, அதற்கும் விழா நடத்தப்படும் என்று சொன்ன முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பயன்பாட்டின் காரணமாக இருக்கக்கூடிய வக்ஃப். பள்ளி வாசல்கள், தர்க்காக்கள், மதரசாக்கள்-நீண்ட காலமாக எந்தவிதமான சர்ச்சைக்கும் உள்ளாகாத இடங்களில் இந்த பள்ளி வாசல்கள், தர்க்காக்கள், மதரசாக்கள் இருக்கின்றது. அதற்கு பட்டா அளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா?

வக்ஃபு வாரியத்தில் AS1 என்பது ஒரு முக்கியமான பொறுப்பு. அது நீண்ட காலம் காலியாக இருக்கின்றது. அந்தப் பணியை நிரப்புவதற்கும் இந்த அரசு முன்வருமா?

அமைச்சர் சா.மு.நாசர்: பள்ளிவாசல், கபர்ஸ்தான், தர்கா, மதரசா போன்ற நீண்ட கால கட்டடங்கள் உள்ள இடங்களுக்கு பட்டா வழங்க வருவாய்த் துறை செயலாளர் வாயிலாக நில நிர்வாக ஆணையர் மற்றும் நில அளவை இயக்குனர் அவர்களுக்கு குறிப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

உறுப்பினர் அவர்கள், வக்ஃபு வாரியத்தில் AS1 பதவி அதாவது உதவி செயலாளர் பதவி காலியாக உள்ளது என்று குறிப்பிட்டார்கள். இந்த பதவியை நிரப்ப பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் அவர்களால், வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடம் துணை ஆட்சியர் நிலையில் நிரப்ப இசைவு கோரப்பட்டு, அவரது அனுமதி எதிர் நோக்கப்படுகிறது. வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து இசைவு வரப்பெற்றதும் இப்பதவியை நிரப்ப துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இன்றையதினம் இது போன்ற வக்ஃபு தனியார், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், வேதாலயம் என்ற இடத்தில் வக்ஃபு நிலத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருவதைப் போலவும், மயிலாடுதுறை மாவட்டம், சங்கரன்பந்தல் பகுதியில் வக்ஃபு நிலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க 2024 ஆம் ஆண்டு சுகாதாரத் துறைக்கு அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது போலவும், உறுப்பினர் அவர்கள் வக்ஃபு நிலங்களை தனியார் குத்தகைக்கு கேட்டிருக்கிறார்கள். இதுபோன்ற வக்ஃபு நிலங்கள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் சமூக நலத்திட்டங்களை மேற்கொள்ள நிலங்களை தனியாருக்கு வழங்க மனுக்கள் வரும்பட்சத்தில் பரிசீலனை செய்து, தகுதியின் அடிப்படையில், விதிகளுக்குட்பட்டு நீண்ட கால குத்தகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவரது ஆலோசனையின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**எஸ்.எஸ்.பாலாஜி:** கபர்ஸ்தான் கோரிக்கைகள் தொடர்பாக ஒரு ஆய்வுக் கூட்டத்தை, வருவாய்த் துறை மற்றும் அந்த மாவட்ட நிர்வாகத்தோடு நடத்தி உடனடியாக அந்த கபர்ஸ்தான்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு அமைச்சர் முன்வருவார்களா?

**அமைச்சர் சா.மு.நாசர்:** இதுபோன்ற கபர்ஸ்தான் பிரச்சினைகள் ஒட்டுமொத்தமாக அனைத்துப் பகுதிகளிலும் இருப்பதை அறிவோம். எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இவைகளை நேரில் ஆய்வு செய்து, அதற்கான தீர்வுகளை மிக விரைவில் ஏற்பாடு செய்து தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 62வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப். 23-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 62வது நாள் வில்லிவாக்கம் மேற்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உணவு வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 62 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (22.4.2025) வில்லிவாக்கம் மேற்கு பகுதி 1) 104 வட்டம் - தங்கம் காலனி, அண்ணாநகர் மேற்கு, சென்னை 2) 104 அ வட்டம் - டி.வி.நகர், திருமங்கலம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே. வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வ வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ்

வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ. முருகேசன், ப.லோகுபாபு, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.





சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி 104 வது வட்டத்தில், வட்டச் செயலாளர் சொ.முருகேசன் தலைமையில் அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே.சேகர்பாபு தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார். உடன் சட்ட மன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன்,பகுதி செயலாளர், மண்டலகுழு தலைவர் கூ.பீ.ஜெயின், பொதுக் குழு உறுப்பினர் மாமன்ற உறுப்பினர் டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன் மாமன்ற உறுப்பினர், மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன், இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


